# IDEAL INDIAN SCHOOL, DOHA- QATAR

# MODEL QUESTION PAPER -2021-22

## PERIODIC TEST -1,

## SECOND LANGUAGE TAMIL

**CLASS: IX** **MAX.MARKS: 40**

**TIME: $1\frac{1}{2}$ HOURS.**

---

இக்கேள்வித்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது;

PART – A (MCQ - 20 MARKS)

1. படித்தல் -10 மதிப்பெண்கள்
2. இலக்கணம் - 8 மதிப்பெண்கள்
3. இலக்கியம் - 2 மதிப்பெண்கள்

PART – B (DESCRIPTIVE - 20 MARKS)

4. சிறுவினா செய்யுள் - - 6 மதிப்பெண்கள்
5. பெருவினா (உரைநடை) - 8 மதிப்பெண்கள்
6. கடிதம் (or) கட்டுரை - 6 மதிப்பெண்கள்

---

## பகுதி ; அ படித்தல் - 20 மதிப்பெண்கள்

**1.கீழ்வரும் பத்தியைப் படித்து. வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக.** (5x1=5)

பாரதநாடு பழம்பெரும் நாடு, இந்நாட்டில் இமயம்முதல் குமரிவரை வற்றாத வளம் கொழிக்கும் பேராறுகள் அன்றுதொட்டு இன்றுவரை ஓடிக்

கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணமாக அமைவது மழையே, உயிரின் உறைவிடம் உடல். மழை நீரின் உறைவிடம் நிலம், எனவே நிலத்தடி நீரை பாதுகாத்து சேமித்து வைப்பதன் முலமாக நீண்ட காலத்திற்கு தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கலாம். எனவே, 'விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்துளி' என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் அரசுடன் சேர்ந்து மழைநீர் சேமிப்பில் ஈடுபட்டால் நாடு நலம் பெறும் நல்ல வளம் பெறும்.

**வினாக்கள்**

1) பாரத நாட்டின் வளத்திற்கு காரணமாக அமைவது?

அ) மணல் ஆ) காற்று இ) மழை

2) உயிரின் உறைவிடம் எது?

அ) பொருள் ஆ) உடல் இ) ஆவி

3) வளம் - என்ற சொல்லின் பொருள் யாது?

அ) வறுமை ஆ) இனிமை இ) செழுமை

4) நாடு நலம் பெற நாம் என்ன செய்ய வேண்டும்?

அ) ஊருடன் ஒத்து வாழ வேண்டும் ஆ) மழைநீர் சேமிப்பில் ஈடுபட வேண்டும் இ) நன்றி மறவாமல் வாழ வேண்டும்

5) நிலத்தடி நீரை சேமிப்பதனால்

அ) வறுமையில்லாமல் வாழலாம் ஆ) தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கலாம் இ) தூய்மையாக வாழலாம்

**2.கீழ்வரும் பாடலைப் படித்து. வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக.** **(5x1=5)**

விரலை மடக்கியவன் இசையில்லை - எழில்
வீணையில் என்று சொல்லுவதுபோல்
குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்

**வினாக்கள்**

1. இப்பகுதி இடம் பெற்றுள்ள பாடல் என்ன?

அ) தமிழ்விடு தூது ஆ) தமிழோவியம் இ) மணிமேகலை

2. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) சேக்கிழார் ஆ) சீத்தலைச் சாத்தனார் இ) ஈரோடு தமிழன்பன்

3.எழில் - என்பதன் பொருள் என்ன?

அ) வண்ணம் ஆ) அழகு இ) நிறம்

4.இசையில்லை - சொல்லைப் பிரித்து எழுதுக.

அ) இசை +இல்லை ஆ) இசை + ல்லை இ) இசை + யில்லை

5.புதுக்கோலம் புனைந்து என்ன வளர்க்க வேண்டும்?

அ) அறிவியல் ஆ) தமிழ் இ) அறிவு

**3) நிரப்புக  (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)  (4x1=4)**

1.'பூக்களைப் பறிக்காதீர்' - என்பது __________தொடர்

அ) கட்டளைத் தொடர்  ஆ) வினைத்தொடர்  இ) செய்தி தொடர்

2.சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த சொல் ---------

அ) பயனில்லை  ஆ) எழுவாய்  இ) செயப்படுபொருள்

3. என்னிடம் புத்தகம் இருக்கிறது என்பது ---------

அ) துணைவினை  ஆ) முதல்வினை  இ) கூட்டுவினை

4. **க ச த ப** - என்ற வல்லின எழுத்துக்கள் மொழிக்கு ----------  வரும்

அ) இடையில்  ஆ) முதலில்  இ) இறுதியில்

5. கிழக்குப் பகுதி என்பது -----------

அ) திசைப்பெயர்  ஆ) பண்புப்பெயர்  இ) வினைப்பெயர்

**4) சான்று தருக.  (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)  (4x1=4)**

1.வினாப்பயனிலை

அ) சொன்னவள் மாலா  ஆ) பேசியது யார்?  இ) நீ படித்தாய்

2. செய்வினைத் தொடர்

அ) தோசை வைக்கப்பட்டது  ஆ) மாமா சொன்னார்  இ) அவன் மாணவன்

3.கூட்டுவினை

அ) சொல்லிக் கொடுத்தான்  ஆ) ஆடுகிறான்  இ) படம் பார்த்தேன்

4. மலர்க்கை

அ) உவமைத் தொகை ஆ) பண்புத் தொகை இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

5.பெயர்ப்பயனிலை

அ) நீ படித்தாய் ஆ) வந்து பாரீர் இ) இது நாற்காலி

**5) மனப்பாடக் குறட்பாக்களைச் சரியான சீர்களில் நிரப்புக. (2x1=2)**

1. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் ---------

ஆஅதும் என்னு மவர்

அ) செவினை ஆ) செய்வினை இ) தீவினை

2. ---------------- மிக்கவை செய்தாரைத் தாம்தம்

தகுதியான் வென்று விடல்

அ) விகுதியான் ஆ) மிகுதியான் இ) பகுதியான்

**பகுதி ; ஆ - 20 மதிப்பெண்கள்**

**6) எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி (2x3=6)**

1. தூது அனுப்ப தமிழே சிறந்தது தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

2. உங்கள் ஊர் திருவிழாவை இந்திரவிழா நிகழ்வுடன் ஒப்பிடுக.

3. கேள்விச் செல்வம் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?

**7) எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி (2x4=8)**

1.இலக்கியங்களில் ஏறுதழுவுதல் பற்றிக் கூறப்படுவது யாது?

2.தமிழின் தனித்தன்மைகளை விளக்குக

3.தண்ணீர்தேவையை நிறைவுசெய்ய நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக

**8) ஏதேனும் ஒரு கடிதம் அல்லது கட்டுரை எழுதுக (6x1=6)**

புயல் காரணமாக பாதித்த மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து தருமாறு மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக

*[ உமது முகவரி : கரண் / கல்யாணி , 21- தேவி நகர், சென்னை -11. எனக் கொள்க ]*

**(அல்லது)**

குறிப்புச் சட்டகம் - முன்னுரை - சேமிப்பின் இன்றியமையாமை – சஞ்சாயிகா திட்டம் – மாத சேமிப்புத்திட்டம் - முடிவுரை

*********************************************************************************